# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2018.03.16 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## தேசிய கணக்காய்வு

**கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கும்; தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; பகிரங்க நிதிமீது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.**

பிரதம அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 90.00 | தபாற் செலவு : ரூபா 30.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# தேசிய கணக்காய்வு

*ச.வ.ஒ. 3/2015*

**கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கும்; தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; பகிரங்க நிதிமீது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:*

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *(1) இச்சட்டம், 2018ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் சனாதிபதி நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*கணக்காய்வுகள் தொடர்பாக ஏற்புடையற்பாலதான சட்டம்.*

***2.*** *அரசியலமைப்பின் 153, 153அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ, 153ஏ மற்றும் 154 ஆகிய உறுப்புரைகளில் போற்றிக்காக்கப்பட்ட ஏற்பாடுகளும், இச்சட்டத்தினதும், ஏற்புடையற்பாலதாக இருக்கக் கூடியவாறான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளும், கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் கணக்காய்வுகளுக்கும் அவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

## பாகம் I

### கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளின் நோக்கெல்லை

கணக்காய்வுக் குட்படு உருவகங்கள் தொடர்பாகக் கணக்காய்வின் நோக்கெல்லை.

**3.** (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி—

(அ) திரட்டு நிதியத்திலிருந்தான எல்லாச் செலவினங்களையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்;

(ஆ) செலுத்தீடுசெய்யப்பட்டனவாகக் கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் கணக்குகளில் காட்டப்பட்ட பணங்கள், அவை எந்தச் சேவைகளுக்காக அல்லது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது பொறுப்பிக்கப்பட்டுள்ளனவோ அந்தச் சேவைகளுக்காக அல்லது நோக்கங்களுக்காகச் சட்டமுறையாகக் கிடைக்கக்கூடியனவாகவிருந்தன மற்றும் ஏற்புடையற்பாலனவாகவிருந்தன என்பதை நிச்சயித்தல் வேண்டும்;

(இ) செலவினமானது அதனை அனுமதிக்கின்ற அதிகாரத்துக்கு இசைந்தொழுகுகின்றதா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) ஒவ்வொரு கணக்காய்விலும், அத்தகைய கணக்காய்வின் செலவினம், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கணக்குகள் என்பனபற்றி அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்பட்ட கணக்காய்வொன்றின் நோக்கெல்லை, கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் கணக்குகள், நிதிகள், நிதிநிலைமை மற்றும் பகிரங்க நிதியினதும் ஆதனங்களினதும் புத்திசாலித்தனமான முகாமைத்துவம் என்பனவற்றைப் பரிசோதனை செய்வதனை உள்ளடக்கும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் கணக்காய்வாளர் தலைமையதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குப் பொதுமக்கள் அறிவித்தல்.*

**4.** மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கணக்காய்வாளர் தலைமையதிபதி, எடுத்துக்கூறப்பட்ட விடயங்கள் பற்றிய கணிசமான எண்பிப்புடன் சேர்த்து பொதுமக்கள் எவராலும் எழுத்தில் அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் ஒரு கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பானதுமான ஏதேனும் விடயத்தைப் பரிசோதனைசெய்யலாம்.

*ஏற்புடையற் பாலனவான கணக்காய்வு நியமங்கள்.*

**5.** (1) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், 29ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியக் கணக்காய்வு அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்படும் கணக்காய்வுகளுக்கு ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

(2) இலங்கைக் கணக்காய்வு நியமங்களில், நிறைவேற்றுகைக் கணக்காய்வுகள், சூழல் கணக்காய்வுகள், தொழில்நுட்பக் கணக்காய்வுகள் மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காகக் கணக்காய்வு நியமங்கள் குறித்துரைக்கப்பட்டிராதவிடத்து, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவானது, அத்தகைய கணக்காய்வுகளுக்கு ஏற்புடையனவாக வேண்டிய உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச ஒழுங்கமைப்பினால் தீர்மானிக்கப்பட்ட உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை, உள்ளூர்த் தேவைப்பாடுகளுக்கொவ்வ அவசியமான திருத்தங்களுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குறித்துரைக்கலாம்.

## பாகம் II

### கணக்காய்வாளர் தலைமையதிபதியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

கணக்காய்வாளர் தலைமை யதிபதியின் கடமைகளும் பணிகளும்.

**6.** (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், கணக்காய்வொன்றை நிறைவேற்றுகையில்-

(அ) திறைசேரிகளுட்பட ஏதேனும் கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் கணக்குகளையும் மற்றும் அத்தகைய கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் தொடக்க அல்லது துணைநிலைக் கணக்குகளையும் சோதனையிடுதல் வேண்டும்;

(ஆ) அவரது கடமைகள் எக்கொடுக்கல்வாங்கல்களுக்கு நீடிக்கின்றனவோ அக்கொடுக்கல்வாங்கல்களைக் கையாளுகின்ற அல்லது அவற்றின் அடிப்படையாக வமைகின்ற அல்லது வேறுவகையாக அவற்றுக்கு இயைபாகவுள்ள எவையேனும் கணக்குகள், புத்தகங்கள், பத்திரங்கள் மற்றும் வேறு ஆவணங்கள் என்பன, அவரது சோதனைக்காக அவர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய இடத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்துதல் வேண்டும்;

(இ) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரை வினவுதல் வேண்டும் அல்லது அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய அவதானிப்புகளை செய்தல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் கணக்கை அல்லது அறிக்கையைத் தயாரிப்பதற்காக அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவல்களைக் கோருதலும் வேண்டும்;

(ஈ) கணக்காய்வுக்குட்படு உருவகத்தினால் கணக்காய்வுக்காக முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் தொகுதி,

(i) ஏற்புடையற்பாலனவான நிதிசார் அறிக்கையிடுதல் நியமங்களுக்கிணங்கவுள்ளதென்றும்;

(ii) பரிசீலனையின்கீழுள்ள ஆண்டுக்காகக் கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் அலுவல்களினது உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை முன்வைப்பதற்குக் கருதப்பட்டுள்ளதென்றும்;

(iii) முற்போந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றதென்றும்; அத்துடன்

(iv) முன்னைய ஆண்டில் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட எவையேனும் விதப்புரைகளை உள்ளடக்குகின்றதென்றும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி, பகிரங்கக் கணக்குகள் குழுவுக்கும் மற்றும் பகிரங்கத் தொழில்முயற்சிகள் மீதான குழுவுக்கும், அவை தமது பணிகளைக் கூடுதல் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்கு உதவுதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய உதவி தேவைப்படும்போது வேறெல்லாப் பாராளுமன்றக் குழுக்களுக்கும் உதவுதல் வேண்டும்.

(3) மூன்றாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம், தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சிக்கு அல்லது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனிகளின் பங்குகளில் அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஓர் உள்ளூர் அதிகாரசபை, ஐம்பது சதவீத அல்லது அதற்குமேற்பட்ட பங்குகளை

வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனிக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடனும், அத்தகைய கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்வதற்குத் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை அல்லது கணக்காய்வாளர்களை நியமிக்கலாம். அத்தகைய நியமனம் அமைச்சரினால் செய்யப்பட்டுள்ளவிடத்து, கணக்காய்வாளர் தலைமையதிபதி, அத்தகைய கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவரின் அல்லது அவர்களின் சேவைகளைத் தாம் பயன் படுத்துவதற்கு உத்தேசிக்கின்றாரென எழுத்தில் அறிவிக்கலா மென்பதுடன், அதன்மேல், அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் செயலாற்றுதலும் வேண்டும்.

கணக்காய்வொன்றை நிறைவேற்றுவதில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் தத்துவங்கள்.

**7.** (1) அரசியலமைப்பின் உறுப்புரை 154(5) இன்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுடனும் பணிகளுடனும் சேர்த்து மேலதிகமாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றின் கணக்காய்வு தொடர்பில் பின்வரும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்:-

(அ) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக எவையேனும் எழுத்திலான அல்லது இலத்திரனியல் பதிவேடுகளை அல்லது வேறு தகவல்களை அணுகுதல் அல்லது கோருதல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான பணிகளைக் கொண்டுநடாத்து வதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறாக, தகவல்களையும் ஆவணங்களையும் தம்வசம் வைத்திருக்கின்றாரென நம்புவதற்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதி நியாயமான ஏதுக்களைக்கொண்டுள்ள எவரேனுமாளைக் கோருதல், எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான கூற்றுக்களைப் பெறுதல் மற்றும் ஒன்றில் சேவையிலிருக்கக்கூடிய அல்லது அவ்வாறற்ற எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் ஆவணம் காண்பிக்கப்படுதலைத் தேவைப்படுத்துதல்;

(இ) எவையேனும் எழுத்திலான அல்லது இலத்திரனியல் பதிவேடுகளைப் பரிசோதனைசெய்து அவற்றின் பிரதிகளை எடுத்தல் அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுபகுதிகளை எடுத்தல் மற்றும் கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் கட்டுக்காப்பில் இருப்பினுஞ்சரி அல்லது இல்லாதிருப்பினுஞ்சரி தகவல்களைத் தேடுதல்;

(ஈ) இயைபான நீதிவான் நீதிமன்றத்திடமிருந்து அனுமதி பெற்றபின்னர், கணக்காய்வுக்குட்படு உருவகத்திற்குரிய பணம் எவரேனுமாளின் கணக்கினுள் மோசடியான முறையில், ஒழுங்கீனமாக அல்லது பிழையாகச் செலுத்தப்பட்டுள்ளதென நம்புவதற்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குக் காரணமுள்ளவிடத்து, அத்தகைய ஆளினதும் ஒரு நிதிநிறுவனத்தினதும் ஏதேனும் கணக்கை, கொடுக்கல்வாங்கலை அல்லது செயற்பாட்டைப் பரிசோதனைசெய்து கணக்காய்வுசெய்தல்;

(உ) பந்தி (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாளின் கணக்கு, கொடுக்கல்வாங்கல், கையாளுகை அல்லது செயற்பாடு தொடர்பான ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படியும் அல்லது ஏதேனும் தகவலை வழங்கும்படியும், அவசியமாயின், அவ்வாறு காண்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் பிரதிகளை எடுக்கும்படியும் எவரேனும் அலுவலரைத் தேவைப்படுத்துதல்;

(ஊ) அத்தகைய அலுவலரினால் நிறைவேற்றப்பட்ட கணக்காய்வின் பெறுபேறுகளின்மீது, ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தினதும் ஆளும் குழுவிடமிருந்து கருத்துக்களைப் பெறுதல்;

(எ) கணக்காய்வு நிதியத்திலிருந்து வெகுமதிகளையும் ஊக்குவிப்புகளையும் செலுத்துதல்; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தின் நோக்கங்களை எய்துவதுடன், சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான வேறெல்லா விடயங்களையும் செய்தல்.

(2) இலங்கையின் தேசியப் பாதுகாப்புத்தொடர்பான எந்தத் தகவலை வெளிவிடுதல் பங்கமானதாகவுள்ளதோ அந்த ஏதேனும் தகவல், பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கணக்காய்வாளர் தலைமையதி பதியினால் நேரடியாகக் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆளொவ்வொருவரும் இப்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டுமென்பதுடன், அத்தகைய இணங்கி யொழுகுகையானது இரகசியத்தன்மை, அந்தரங்கத்தன்மை அல்லது வெளிவிடாமை தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மீறுகையொன்றாகக் கருதப்படுதலுமாகாது.

(4) ஒராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக் காக எவரேனுமாள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் அழைக்கப்படுமிடத்தும், அத்தகைய ஆள் தவிர்க்கமுடியாத காரணங்களினால் நேரடியாகத் தோன்றுவதற்கு இயலாதவராக வுள்ளவிடத்தும், கணக்காய்வாளர் தலைமையதிபதி முன்னர் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாள்முன்னர் தோன்றுவதற்கு விடயம் பற்றிப் பரிச்சயமுள்ள ஆளொருவரை அவர் பெயர் குறித்து நியமிக்கலாம்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அவரது கடமை களையும் பணிகளையும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் எவரேனுமாளின் அல்லது அதிகாரியின் தலையீட்டுக்கு அல்லது செல்வாக்குக்கு அமைந்தவராதலாகாது.

*கணக்காய்வாளர் தலைமையதி பதியினால் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டிய தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.*

**8**. கணக்காய்வாளர் தலைமையதிபதி பின்வரும் தத்துவங் களையும், கடமைகளையும் பணிகளையும் தாமே பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) அரசியலமைப்பின் 154(4)ஆம் உறுப்புரையின்கீழ் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை அல்லது தொழில்நுட்ப, உயர்தொழில்சார் அல்லது அறிவியல்சார் நிபுணத்துவத்தைக் கொண்ட எவரேனும் ஆளை அல்லது நிறுவனத்தை நியமித்தல்;

(ஆ) அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையின்கீழ் அவரது கடமைகளையும்பணிகளையும் அவர் புரிந்தமை மற்றும் நிறைவேற்றியமை பற்றிப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுதல்;

(இ) கணக்காய்வு நிதியத்தை நிருவகித்தல்.

தகவல்களை வெளிவிடாமை.

**9.** (1) கணக்காய்வுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது இச்சட்டத்தின்கீழான ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அத்தகைய ஆளுக்கு உதவுகின்ற வேறெவரேனும் ஆள் அல்லது அத்தகைய நோக்கத்துக்காகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் ஈடுபடுத்தப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் தவிர, அவரினாற் பெறப்பட்ட எவையேனும் தகவல்களை வெளிவிடுதலாகாதென்பதுடன்,-

(அ) பாராளுமன்றத்தின் வேண்டுகோளின்மீது தவிர அல்லது நீதிமன்றக் கட்டளையொன்றின்மூலம் தவிர அல்லது (ஆ)என்னும் பந்திக்கு அமைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்காகத் தவிர, எவையேனும் தகவல்களை வெளிவிடுவதற்கு எவரேனும் ஆளினால் வலுக்கட்டாயப்படுத்தப்படுதலுமாகாது;

(ஆ) தகவலை வெளிவிடத்தேவைப்படுத்தும் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் தகவலை அளித்த இயைபான ஆளின் அல்லது நிறுவனத்தின் ஏலவேயான எழுத்தில் கொடுக்கப்பட்ட சம்மதத்துடனன்றி அத்தகைய தகவலை, அத்துடன் அத்தகைய தகவல்பற்றிய இயைபான அறிக்கையும் கூற்றும் தேவைப்படுத்தப்படக்கூடியவாறு கணக்காய்வாளர் தலைமையதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்வரை வெளிவிடுதலுமாகாது; அத்துடன்

(இ) இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாக இரகசியம் பேணுவதற்கான சத்தியமொன்றை அவர் மொழிந்து கையொப்பமிடும்வரை தமது பதவிக்குரிய கடமைகளை ஏற்றலுமாகாது. கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இரகசியம் பேணுவதற்கான சத்தியமொன்றை பாராளுமன்றச் சபாநாயகர் முன்னராக மொழிந்து கையொப்பமிடுதலும் இதில் குறித்துரைக்கப்பட்ட வேறு எல்லா ஆட்கள் சொல்லப்பட்ட சத்தியத்தை கணக்காய்வாளர் தலைமை யதிபதி முன்னராகவும் மொழிந்து கையொப்பமிடுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய ஏதேனும் விடயத்தை எவரேனுமாளுக்கு அறிவிக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் விடயம் தொடர்பான எவையேனும் புத்தகங்களை, பத்திரங்களை அல்லது வேறு பதிவேடுகளை அணுகுவதற்கு எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஆளை விடுகின்ற அல்லது அனுமதிக்கின்ற அத்தகைய எவரேனும் உறுப்பினர் அல்லது ஆள் அல்லது தகைமைபெற்ற கணக்காய்வாளர் தவறொன்றைப் புரிகின்றார்.

## பாகம் III

## கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அறிக்கைகளும் கூற்றுக்களும் சமர்ப்பிக்கப்படுதல்

*கணக்காய்வாளர் தலைமையதிபதி ஆண்டுதோறும் ஓர் அறிக்கையைப் பாராளு மன்றத்துக்குச் சமர்ப்பித்தல்.*

**10.** (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி,ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்தபின்னர் மூன்று மாதங்களினுள், ஆண்டினபோது அவரினால் நிறைவேற்றப்பட்ட கணக்காய்வு களினது பெறுபேறுகளின் மீது ஆண்டுதோறும் அறிக்கை யொன்றைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டு மென்பதுடன், அவரது முடிவெடுப்புக்கள் தொடர்பாக ஏதேனும் கணக்காய்வுக்குட்படு உருவகத்தினால் தெரிவிக்கப்பட்டிருக்கக் கூடிய ஏதேனும் அவதானிப்பையும் அத்தகைய அறிக்கையில் உள்ளடக்குதலும் வேண்டும்.

(2) குறிப்பிட்டவோர் ஆண்டு தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தலானது எழுத்திலான சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைகளினுள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான அறிக்கை, அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபின்னர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அலுவலகமுறையான இணையத் தளத்தினூடாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கிடைக்கக்கூடியதாக்கப்படலாம்.

*சுருக்கமான அறிக்கையும் வருடாந்த விபரமான முகாமைக் கணக்காய்வறிக்கையும்.*

**11.** (1) ஒரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நிதிக்கூற்று அல்லது ஏதேனும் கணக்குத் தொடர்பில் அத்தகைய கணக்காய்வுக்குட்படு உருவகத்துக்கு ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்தபின்னர் ஐந்து மாதங்களினுள் சுருக்கமான அறிக்கையொன்றைக் கணக்காய்வாளர் தலைமையதிபதி வழங்குதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவின் பின்னர் ஐந்து மாதங்களினுள் ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தினதும் ஆளும் குழுவுக்கும் வருடாந்த விபரமான முகாமைக் கணக்காய்வு அறிக்கையொன்றை, அவ்வக் கணக்காய்வுக்குட்படு உருவகம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருக்கும் நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருக்கும் ஒரு பிரதியுடன் முன்வைத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனங்களும் கம்பெனிகளும் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையினது பொருளடக்கம்.*

**12.** கணக்காய்வாளர் தலைமையதிபதி,பகிரங்க கூட்டுத்தாபனமொன்றின் அல்லது எக்கம்பெனியில் அரசாங்கம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனமொன்று பங்குகளின் ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்களும் வேறு இயைபான ஆவணங்களும் தகவல்களும் பெறப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய பகிரங்க கூட்டுத்தாபனத்தின் அல்லது கம்பெனியின் வருடாந்த அறிக்கையில்

வெளியிடப்படுவதற்காக அதன் ஆளும் குழுவின் தவிசாளருக்கு அறிக்கையொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கை பின்வருவனவற்றைக் கூறுதலும் வேண்டும்:-

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் கணக்காய்வின் நோக்கத்துக்கு அவசியமாகவிருந்த இயைபான நியாயமானமுறையில் தகவல்களும் விளக்கங்களும் பெறப்பட்டிருந்தனவாவென்பதையும்;

(ஆ) நிதிக்கூற்றுக்கள், உருவகத்தின் நிதிநிலைமை, அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல்கள் பற்றி உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வெளிப்படுத்துகின்ற வகையில், விடயத்திற்கேற்ப, கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறாக இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் அல்லது இலங்கைப் பகிரங்கத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளனவாவென்பதையும்;

(இ) திரட்டிய நிதிக்கூற்றுக்கள், உருவகத்தினதும் ஏற்புடையற்படற்பாலவாறு அதன் துணைநிலைக் கம்பெனிகளினதும் இணைக்கம்பெனிகளினதும் நிதி நிலைமை, அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் அத்தகைய உருவகத்தினதும் அதன் துணைநிலைக் கம்பெனிகளினதும் காசுப் பாய்ச்சல்கள் பற்றி உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வெளிப்படுத்துகின்றவகையில், விடயத்திற்கேற்ப, கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள், இலங்கைப் பகிரங்கத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளனவாவென்பதையும்;

(ஈ) அத்தகைய உருவகத்தின் ஆளும் குழுவின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய உருவகத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக

அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளாராவென்பதையும், அவ்வாறாயின், அத்தகைய உறுப்பினரினது அக்கறையின் தன்மையும் அதன்மீது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சொந்தக் கருத்துக்களையும் கருத்துரைகளையும்;

(உ) கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பரிசோதனை செய்யப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்களின் மீது வரைபுபடுத்தப்பட்ட, விட்டுவிடப்பட்ட, பாதகமான அல்லது ஒத்த கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கான காரணங்களையும்;

(ஊ) கணக்காய்வுக்குட்படு உருவகம் ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்துடன் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட உருவகத்தின் ஆளும்குழுவால் வழங்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுகியுள்ளதா அல்லது இணங்கியொழுகாதுள்ளதாவென்பதையும்;

(எ) கணக்காய்வுக்குட்படு உருவகம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கிணங்க செயலாற்றியுள்ளதாவென்பதையும்;

(ஏ) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளனவாவென்பதையும்; அத்துடன்

(ஐ) சட்டத்தின் நோக்கங்களை எய்துவதற்கு அவசியமானதெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி கருதுகின்ற வேறேதேனும் விடயத்தையும்.

**13.** கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஏதேனும் நிதி ஆண்டின்போது நடாத்தப்பட்ட ஏதேனும் கணக்காய்வு பற்றிப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அலுவலகமுறையான இணையத்தளத்தினூடாக அத்தகைய அறிக்கையைப் பகிரங்கமாக கிடைக்கக்கூடியதாக்கவும் ஆக்கலாம்; அத்துடன் கணக்காய்வின் போது பெறப்பட்ட ஏதேனும் அறிக்கையை, தகவலை, ஆவணத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது கணினிமூலம் தோற்றுவிக்கப் பட்ட எழுத்துப்படிவத்தைச் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு அவர் வழங்கவேண்டியிருப்பின் அல்லது வழங்குவதற்கு உட்கருதியிருப்பின் அவ்வறிக்கையை வெளியிடுதலாகாது.

விசேட அறிக்கைகள்.

**14.** கணக்காய்வாளர் தலைமையதிபதி, மூன்று நிதியாண்டு களைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதியும் முடிந்தபின்னர் ஒன்பது மாதங்களினுள் ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தினதும் நிலைவர அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும். பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது, இனங்காணப்பட்ட பாரிய குறைபாடுகள், அவரினால் செய்யப்பட்ட விதப்புரைகள், கணக்காய்வுக்குட்படு உருவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் மற்றும் அதுபற்றிய நிலைமை என்பவற்றை அறிக்கை கொண்டிருத்தல் வேண்டும்.

மூவாண்டுக்கொரு முறையான அறிக்கைகள்.

**15.** (1) திறைசேரிச் செயலாளர், அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக் களை அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்குச் சமர்ப்பித்தல்.

(2) நிதியமைச்சின் வருடாந்த அறிக்கையும் அரசாங்கத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களும் அதன்மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயமும், அடுத்துவரும் நிதியாண்டின் மே 31 ஆந்தேதிக்கு முன்னர் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரால் பாராளு மன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) "அரசாங்கத்தின் நிதிக்கூற்று" பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) ஆண்டுக்கான ஒரு நிறைவேற்றுகை அறிக்கையுடன் சேர்த்து, நிதியாண்டின்போது நிதி நிறைவேற்றுகைக் கூற்று, அரசாங்கத்தின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் காட்டுகின்ற நிதிநிலைமைக் கூற்று மற்றும் நிதியாண்டிற்கான ஒரு காசுப் பாய்ச்சற்கூற்று, பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் அவை பற்றிய குறிப்புகளும்;

(ii) சொல்லப்பட்ட நிதிக்கூற்றின்மீது அவரது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக்கூடியவாறான வேறெவையேனும் ஆவணங்கள்; அத்துடன்

(iii) சொல்லப்பட்ட நிதிக்கூற்றில் கவனத்துட் கொள்ளப்பட்ட கணக்காய்வுக்குட்படு உருவகங்களை நிரற்படுத்துகின்ற கூற்றொன்று.

(ஆ) "அரசாங்கம்" என்பது, எந்த அரசாங்க நிறுவனங்களுக்காக வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் நிதிகள் குறித்தொதுக்கப்படுகின்றனவோ அந்த அரசாங்க நிறுவனங்கள் என்று பொருளாகும். இப்பிரிவின் நோக்கத்துக்காக அரசாங்கம் எனக் கருதப்படக்கூடிய வேறேதேனும் நிறுவனத்தைச் சனாதிபதியானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம்;

(இ) "நிறைவேற்றுகை அறிக்கை" என்பது, எய்தப்பட்ட குறிக்கோள்கள், எதிர்கால இலக்குகள், தலையாய நிறைவேற்றுகைச் சுட்டிகள் மற்றும் வளங்களின் பயன்பாட்டிலான முன்னேற்றம் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

**16**. (1) ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகமும், அத்தகைய உருவகம் தொடர்பிலான வருடாந்த மற்றும் காலாகால நிதிக்கூற்றுக் கள் தயாரிக்கப்படுவதனை இயலச்செய்வதற்கு, அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் எல்லாம் பற்றிய தகுந்த புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்.

(2) ஒவ்வோர் அமைச்சும், திணைக்களமும் மற்றும் வேறேதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனமும் ஆணைக்குழுவும் தொடர்பிலான வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, அரசிறைக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகள் உள்ளிட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்களும் மற்றும் வேறு ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பிலுமான வருடாந்த நிதிக்கூற்றுக்களும், விதிகளினால் ஏற்பாடுசெய்யப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதியினுள், வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கைகளுடன் சேர்த்து, பிரதான கணக்கீட்டு அலுவலரினால் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**17**. எந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது கம்பெனியில் அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது அக்கம்பெனியின் பங்குகளினது ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை வைத்திருக்கின்றதோ அந்த ஒவ்வொரு பகிரங்கக் கூட்டுத்தாபனமும் அல்லது கம்பெனியும் அதன் வருடாந்த அறிக்கையில் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கம்பெனியின் வருடாந்த அறிக்கை.

(அ) அத்தகைய உருவகத்தின் ஆளும் குழுவின் தவிசாளருக்கு 12ஆம் பிரிவின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை;

(ஆ) இயைபான ஆண்டுக்கான நிறைவேற்றுகை அறிக்கை;

(இ) இயைபான ஆண்டுக்கான உருவகத்தின் வருடாந்தக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள்; அத்துடன்

(ஈ) நிலைபெறுதகு அபிவிருத்தியின் அடிப்படையிலான எதிர்கால எதிர்வுகூறுகை அறிக்கை; இது, சூழலைப் பாதுகாப்பதற்கும் சூழலின்மீதான ஏதேனும் எதிர் மாறான தாக்கத்தைத் தணிப்பதற்குமான செயற்பாடுகள் பற்றிய விபரங்களை உள்ளடக்கலாம் என்பதுடன், அவசியமானவிடத்து, சூழல் மற்றும் பேரழிவுத்தாக்க மதிப்பீட்டின் ஆய்வையும் உள்ளடக்கலாம்.

கணக்காய்வுக் கட்டணங்கள்.

**18.** (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வொன்றை நடாத்துவதற்காகப் பின்வரும் கணக்காய்வு செய்யப்பட்ட உருவகங்களிடமிருந்து கட்டணமொன்றை விதித்தல் வேண்டும்:-

(அ) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான நிதியங்களும் அல்லது சபைகளும்;

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட தொழில்களும் ஏனைய பொறுப்புமுயற்சிகளும்; அத்துடன்

(இ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப் பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை அக்கம்பெனியின் பங்குகளினது ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை வைத்திருக்கின்றதோ அந்த ஏதேனும் கம்பெனி.

(2) விதிக்கப்படவேண்டிய கட்டணமானது, அவ்வக் கணக்காய்வுக்குட்படு உருவகம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டதோ அந்த அமைச்சரின் இயைபான அமைச்சுச் செயலாளரின் ஒருப்பாட்டுடன் நிதி என்ற விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கலந்தாலோசனையுடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பெறப்பட்ட கட்டணம், கணக்காய்வை நிறைவேற்றுவதில் உறப்பட்ட ஆகுசெலவைக் கழித்த பின்னர் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப் படுதல் வேண்டும்.

(4) கணக்காய்வுக்குட்படு உருவகமொன்று, செலவுச்சிட்டைத் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் கணக்காய்வுக் கட்டணங் களுக்கான கணக்குகளைக் கொடுத்துத் தீர்த்தல் வேண்டும்.

(5) கணக்காய்வுக்குட்படு உருவகமொன்று கணக்காய்வுக் கட்டணங்களின் கொடுப்பனவில் தவறுகை புரிந்தால், அத்தகைய கட்டணங்களை அறவிடும்படி கணக்காய்வாளர் தலைமையதிபதி உடனடியாக நிதியமைச்சுக்கும், ஏற்புடையதானவிடத்து இயைபான மாகாணசபைக்கும் அறிவித்தல் வேண்டும்.

(6) திறைசேரியின் செயலாளர் அல்லது இயைபான மாகாண சபையின் பிரதான செயலாளர், இயைபான தரப்பினரைக் கலந்தாலோசித்தபின்னர், கணக்காய்வுக்குட்படு உருவக மொன்றிடமிருந்து அறவிடப்படற்பாலனவான கணக்காய்வுக் கட்டணங்கள், இயைபான திறைசேரியினால் இனங்காணப்பட்ட தேசிய அல்லது ஒரு மாகாண வரவுசெலவுத்திட்டத்தின் மீதான வாக்கொன்றிலிருந்து கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும்.

## பாகம் IV

### மிகைக்கட்டணம் விதித்தல்

*கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு மிகைக் கட்டணமொன்றை விதித்தல்.*

**19.** (1) (அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறுவகை யாகக் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தா லொழிய, கணக்காய்வுச்சேவை ஆணைக்குழு வானது, கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றின் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலினதும் குறை பாட்டின் அல்லது இழப்பின் பெறுமதிமீது மிகைக்கட்டணமொன்றை விதிப்பதற்காக, அத்தகைய கொடுக்கல்வாங்கல் ஏதேனும்

எழுத்திலான சட்டத்துக்கு முரணாகச் செய்யப் பட்டுள்ளதென்றும், அக்கொடுக்கல்வாங்கலில் சம்பந்தப்பட்டோரின் மோசடி, அசட்டை, கையாடல் அல்லது ஊழல் காரணமாக ஏதேனும் குறைபாடு அல்லது இழப்பு விளைந்துள்ள தென்றும் நம்புவதற்கு கணக்காய்வுச்சேவை ஆணைக்குழு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருக்குமிடத்து, அக்கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ)வில் குறிப்பீடு செய்யப்பட்டவொரு குறைபாட்டை அல்லது இழப்பை விளைவிப்பதில் சம்பந்தப்பட்டுள்ள எவரேனுமாள் இதனகத்துப் பின்னர் "குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், (1)ஆம் உட்பிரிவின்கீழான மிகைக்கட்டணத்தை, ஒன்றில் கூட்டாக அல்லது தனித்தனியாக, குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான எவரேனும் ஆளுக்கெதிராக விதித்தல் வேண்டுமென்பதுடன், ஒழுக்காற்று அதிகாரசபையினால் ஒரு விதிமுறைப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையினால் அல்லது ஒரு நீதிமுறைச் செய்முறையினால் பின்தொடரப்படுதலும் வேண்டும்.

(3) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், அறவிடப்படவேண்டிய தொகையை விதிப்பதில், பின்வரும் நடவடிக்கைமுறையைக் கடைப்பிடித்தல் வேண்டும்:-

(அ) எந்த ஆள் தொடர்பில் மிகைக்கட்டணமொன்று விதிக்கப்படவேண்டுமோ அந்த ஆள் ஒவ்வொருவருக்கும், அத்தகைய விதிப்புக்கான காரணங்களைக் குறித் துரைக்கின்ற அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அறிவித்தல் பெறப்பட்ட

தேதியிலிருந்து இருபத்தொரு நாட்கள் கொண்ட காலப்பகுதிக்குள் (1)ஆம், (2)ஆம் உட்பிரிவுகள் தொடர்பில் காரணங்காட்டி முறையீடு செய்வதற்கு அத்தகைய ஆள் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பொன்றை அளித்தலும் வேண்டும்;

(ஆ) விதிக்கப்படவேண்டிய மிகைக்கட்டணத்தைப் பற்றி முடிபொன்றைச் செய்வதற்கு முன்னர் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட முறையீடுகளைக் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்;

(இ) குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் முறையீடுகள் எவையும் செய்யப்பட்டிராதவிடத்து, கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், விதிக்கப் படவேண்டிய மிகைக்கட்டணம் மீதான முடிபொன்றைச் செய்ய முற்படுதல் வேண்டும்.

(ஈ) மிகைக்கட்டணமானது, குறைபாட்டின் அல்லது இழப் பின் அத்துடன் அத்தகைய குறைபாடு அல்லது இழப்பு எழுந்தபோது திறைசேரி உண்டியல்களுக்கு விதிக்கப் பட்டு திரளக்கூடிய அத்தகைய வட்டியுடன் கூடிய திரண்டதொகைமீது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்;

(உ) பந்திகள் (ஆ) மற்றும் (இ) இன்கீழ் கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரின் முடிபு, பின்வருவனவற்றைக் குறித்துரைத்து மிகைக்கட்டணச் சான்றிதழொன்றை வழங்குவதன்மூலம் குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஒவ்வோர் ஆளுக்கும் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்:-

(i) மிகைக்கட்டணம் விதிப்பதற்கான காரணங்கள்;

(ii) விதிக்கப்படவேண்டிய தொகை, கொடுக்கல் வாங்கலின் குறைபாட்டையும் அல்லது இழப்பையும் தீர்மானிக்கப்பட்ட மிகைக் கட்டணத்தையும் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுத்

தேதியிலிருந்து சொல்லப்பட்ட தொகைகளின் கொடுப்பனவு இரண்டு மாதங்களை விஞ்சுகின்ற தாமதத்துக்காக தீர்மானிக்கப்படக்கூடியவாறான, ஏதேனும் வட்டி நூற்றுவீதத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்;

(iii) அதனை அறவிடுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை;

(iv) எத்தேதியன்று அல்லது எத்தேதிக்கு முன்னர் (ii)ஆம் விடயத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தொகை செலுத்தப்படவேண்டுமோ அத்தேதி;

(v) கொடுப்பனவானது எம்முறையில் செய்யப்பட வேண்டுமோ அம்முறை பற்றிய விபரங்கள்.

(4) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், பிரதான கணக்கீட்டு அலுவலர் குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆளிடமிருந்து கணக்காய்வுக் காலத்தின் போது அவர் சேவையிலிருப்பினும்சரி சேவையிலில்லா திருப்பினும்சரி (3)(உ)(ii) என்னும் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தொகையை மிகைக்கட்டணச் சான்றிதழிற் குறித்துரைக்கப்பட்டவாறு கொடுப்பனவுத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் விதித்தல் வேண்டும்.

மிகைக்கட்டண மேன் முறையீட்டுக் குழுவுக்குச் செய்யப்பட வேண்டிய மேன் முறையீடுகள்.

**20.** (1) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரினால் 19ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட முடிபின் மூலம் இன்னலுறும் எவரேனுமாள், மிகைக்கட்டணச் சான்றிதழ் பெறப்படும் தேதியிலிருந்து ஒருமாதத்தினுள், 21ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவுக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) சொல்லப்பட்ட மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழு —

(அ) மேன்முறையீட்டை அனுமதிக்கலாம்;

(ஆ) முடிபைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது வேறு படுத்தலாம்; அல்லது

(இ) மேன்முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்.

(3) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட முடிபு, மிகைக் கட்டண மேன்முறையீட்டுக் குழுவின் தவிசாளரினூடாக மேன்முறையீட்டாளருக்கும் கணக்காய்வுக் குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கும் கணக்காய்வுச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் அம்முடிபை உடனடியாக நிறைவேற்றுதலும், அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் கணக்காய்வுச்சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்தில் திரும்ப அறிக்கையிடுதலும் வேண்டும்.

(4) எவரேனுமாள் குழுவின் முடிபினால் அதிருப்தியடையுமிடத்து, இப்பிரிவின் (3) (ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது வேலை நாட்களினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அவர் மேன்முறையீடு செய்யலாம்.

(5) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை, கணக்காய்வுக் குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரினால், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவை நியமித்தல்.

**21**. (1) (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவொன்று இருத்தல் வேண்டும். அரசியலமைப்புப் பேரவையானது குழுவையும் அதன் தவிசாளரையும் நியமித்தல் வேண்டும். குழுவானது, 20ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு முடிபினால்

இன்னலுறும் எவரேனுமாளினாற் செய்யப்பட்ட மேன்முறையீடு களைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு, கணக்காய்வு, சட்டம் மற்றும் பகிரங்க நிதி முகாமை, பொது நிருவாகம் அத்துடன் பொறியியல் என்ற துறைகளில் அனுபவமுடையோரிலிருந்து ஐந்து உறுப் பினர்களுக்குக் குறையாதோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் இலங்கை அரச கணக்காய்வாளர் சேவையின் உறுப்பினர் எவரும் குழுவின் உறுப்பினரொருவராகவிருத்தலாகாது. கணக்காய்வாளர் தலைமையதிபதி குழுவின் உறுப்பினரொருவராகவிருத்தலாகாது. குழுவானது கணக்காய்வாளர் தலைமையதிபதியினின்றும் சுயாதீனமாகச் செயலாற்றுதல் வேண்டும்.

(3) சொல்லப்பட்ட குழு, வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டியவையும், மேன்முறையீடு தொடர்பானவையுமான மேன்முறையீட்டு நடவடிக்கைமுறையையும் விதிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

*மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட பணங்களை வரவுவைத்தல்.*

**22.** கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், பிரிவு 19(3)(உ)(ii) என்பதன்கீழ் மிகைக்கட்டணமாகவும் வட்டியாகவும் (ஏதேனுமிருப்பின்) திரண்டுள்ளவையும் அவரினால் சேகரிக்கப்பட்டவையுமான அத்தகைய எல்லாப் பணத்தொகை களையும் திரட்டுநிதியத்துக்கு வரவுவைத்தல் வேண்டும்:

ஆயின், மிகைக்கட்டணமானது ஒரு மாகாண சபை அல்லது உள்ளூரதிகாரசபை தொடர்பில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்க லொன்றுடன் தொடர்புபட்டுள்ளவிடத்து, மிகைக்கட்டணமாகச் சேகரிக்கப்பட்ட பணத்தொகை விடயத்துக்கேற்ப, அத்தகைய மாகாண சபையின் மாகாண நிதியத்திற்கு அல்லது இயைபான உள்ளூரதிகாரசபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

*நீதிவான் முன்னர் அறவிடுவதற் கான வழக்கு நடவடிக்கைகள்.*

**23.** (1) பிரிவு 19(3)(உ)(ii) என்பதன்கீழ் விதிக்கப்படவேண்டிய ஏதேனும் பணத்தொகை குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செலுத்தப்பட்டிராதுள்ளவிடத்தும், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக

உடனடி நடவடிக்கை அவசியமாகவுள்ளதெனத் திருப்திப்படுமிடத்தும், 20(4)ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று முடிவுறாதிருந்தாலொழிய, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, அறவிடப்படவேண்டிய அத்தகைய தொகையின் விபரங்களையும் குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆளின் பெயரையும் கடைசியாக அவர் தொழில்புரிந்ததாக அல்லது வசித்ததாக அறியப்பட்ட இடத்தையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அத்தகைய இடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிவானுக்குத் தொண்ணூறு வேலை நாட்கள் கொண்ட ஒரு காலப்பகுதிக்குள் வழங்கலாம்.

(2) (அ) நீதிவான் அதன்மேல், அறவிடப்பட வேண்டிய பணத்தொகையை அறவிடுவதற்காக மேலதிக நடவடிக்கைகள் குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆளுக்கெதிராக ஏன் எடுக்கப்படலாகாதெனக் காரணங்காட்டுவதற்கு அத்தகைய ஆளைக் கட்டளைவிட்டழைத்தல் வேண்டும்.

(ஆ) குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆள் போதிய காரணங்காட்டத் தவறுமிடத்து, அறவிடப்படவேண்டிய பணத்தொகை, குற்றப் பணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படற்பாலதான மற்றும் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாத தவறொன்றுக்காக அத்தகைய குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆளின்மீது நீதிவானின் ஒரு தண்டனைத் தீர்ப்பின் மூலம் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(3) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சான்றிதழ், அறவிடப்படவேண்டிய பணத்தொகை முறையாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் செலுத்தத்தவறியதாகவும் உள்ளது என்பதற்கு, (1)ஆம் உட்பிரிவின் கீழ்

நீதிவானொருவர் முன்னரான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் முடிவான சான்றாதல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவின்கீழான வழக்குநடவடிக்கை, விடயத்துக்கேற்ப, 20(1)ஆம் பிரிவின்கீழ் மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவுக்கு அல்லது 20(4)ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய,(1)ஆம் உட்பிரிவின்கீழான சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XXIVஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், குற்றப்பணக் கொடுப்பனவில் தவணைதவறியமை தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், மேலதிகமாக, நீதிவான், அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவர் விடுத்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்பையும் விடுக்கலாம்.

(5) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளிலுள்ளதெதுவும், (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில் ஏற்புடையதாதலாகாது.

(6) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆள் குற்றப்பணக் கொடுப்பனவில் தவணைதவறியமைக்காக, ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பு அவருக்கு அளிக்கப்படுதல் வேண்டும். நீதிவான், அக் குற்றப்பணத்தொகையின் செலுத்துகைக்காக காலஅவகாசத்தை அனுமதிக்கலாம் அல்லது அத்தொகையின் கொடுப்பனவு தவணைப்பணங்களில் செலுத்தப்படப் பணிக்கலாம்.

(7) தவணைப்பணங்களில் கொடுப்பனவு செய்யப்படவேண்டுமென நீதிவானொருவர் பணிக்குமிடத்தும் ஏதேனுமொரு தவணைப்பணக் கொடுப்பனவில் தவணைதவறுகை புரியப்படுமிடத்தும், அப்போது செலுத்தப்படாதெஞ்சியுள்ள எல்லாத் தவணைப் பணங்களினதும் கொடுப்பனவில் தவணைதவறுகை புரியப்பட்டிருந்தது என்றாற்போன்று வழக்குநடவடிக்கைகள் தொடரப்படலாம்.

(8) நீதிவானின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபுத்தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(9) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு (1)ஆம் உட்பிரிவின் கீழான சான்றிதழொன்றை வழங்குமிடத்தெல்லாம், அவர் அதேநேரத்தில், குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆளுக்கு, அவர் வதிபவராகவிருப்பினுஞ்சரி அல்லது வதிபவராகவிராதிருப்பினுஞ்சரி, நேரடிச் சேர்ப்பிப்பு, அஞ்சலில் அனுப்பப்பட்ட பதிவுக்கடிதம் அல்லது தொலை அஞ்சற் சேவை மூலம் அதுபற்றிய அறிவிப்பொன்றை வழங்குதல் வேண்டும்; அத்துடன் குறைபாட்டுக்கு அல்லது இழப்புக்குப் பொறுப்பான ஆளினால் அத்தகைய அறிவிப்பு கிடைக்கப்பெறாமை இப்பிரிவின் கீழான வழக்குநடவடிக்கைகளைச் செல்லுபடியற்றனவாக்குதலாகாது.

(10) இச்சட்டத்தின் பாகம் IV இன் நோக்கத்துக்காக, கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கு முரணானவொரு கொடுக்கல்வாங்கலில் மோசடி, அசட்டை, கையாடல் அல்லது ஊழல் காரணமாக ஏதேனும் குறைபாட்டை அல்லது இழப்பை விளைவித்துள்ளாரென அல்லது விளைவிப்பதில் சம்பந்தப்பட்டுள்ளாரெனக் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு காணும் பட்சத்தில், சனாதிபதியானவர், 19ஆம் பிரிவின் (3)(இ) என்னும் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகையைக் கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரிடமிருந்து விதித்தல் வேண்டும்.

## பாகம் V

### கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

**ஒரு கணக்காய்வுச் சேவை ஆணைக் குழுவைத் தாபித்தல்.**

**24.** (1) அரசியலமைப்பின் 153அ(1)ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டதும், கணக்காய்வாளர் தலைமையதிபதியையும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நான்கு வேறு உறுப்பினர்களையும் கொண்டுள்ளதும், (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு அதன் சொந்தச் செயலகத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.**

**25.** அரசியலமைப்பின் 153இ என்னும் உறுப்புரையின்கீழ் தரப்பட்டுள்ள ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகளுடன் சேர்த்து மேலதிகமாக, ஆணைக்குழுவானது -

(அ) ஆணைக்குழுவின் அலுவல்களில் உதவுவதற்கு குழுக்களை நியமித்தல் வேண்டும்;

(ஆ) 31ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேசியக் கணக்காய்வு அலுவலகப் பணியாட்டொகுதியினரின் நிறைவேற்றுகைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டும்;

(இ) உள்ளகக் கணக்காய்வொன்றை நிறைவேற்றுவதற்காகப் பணிப்புகளை வழங்குதல் வேண்டும்;

(ஈ) வழங்கப்பட்ட ஒரு பணிப்பு அல்லது வழிகாட்டுநெறி மீறப்படும்போது விசாரணைகளை நடாத்துதல் வேண்டும்; அத்துடன்

(உ) எந்த விதிகளுக்காக இச்சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த விதிகளை ஆக்குதல் வேண்டும்.

**ஆணைக் குழுவின் கூட்டங்கள்.**

**26.** (1) ஆணைக்குழுவின் தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன், அவர் வருகைதராதிருக்கையில், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தம்முள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும். ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளும் கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவுள்ள பட்சத்தில், கூட்டத்துக்குத் தவிசாளராகக் தலைமை தாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமிருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும், அத்தகைய ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர்களுள் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது அவ்வாறு கருதப்படுதலோ ஆகாது.

(4) ஆணைக்குழுவானது குறைந்தபட்சம் ஒருமாதத்தில் ஒருதடவையேனும் கூடுதல்வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் அவசரமான கூட்டமொன்றைக் கூட்டும்படி குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களினாலேனும் எழுத்திலான வேண்டுகோளொன்று செய்யப்படும் பட்சத்தில், ஆணைக்குழுவின் தவிசாளர் இயன்றளவு விரைவாக, ஆனால் எவ்விடயத்திலும் அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதிலிருந்து பத்து நாட்களுக்குப் பிந்தாமல் அத்தகைய கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவினால் நியமிக்கப்படவேண்டிய ஆணைக்குழுச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் கூட்டங்களினது நிகழ்ச்சிக்குறிப்புகளை முறையாகப் பதிந்து பேணுவதற்கும் ஆணைக்குழுவின் பொது இலச்சினைக்கும் அதன் கட்டுக்காப்புக்கும் செயலாளர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் உறுப்பினராகப் பணிகளை நிறைவேற்றா திருப்பதற்கான அனுமதி.*

**27**. (1) சனாதிபதி, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு, இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக அவரது பணிகளை நிறைவேற்றாதிருப்பதற்கான அனுமதியை வழங்கலாமென்பதுடன்,

அத்தகைய காலப்பகுதியின்போது, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மேலும் அரசியலமைப்பின் 153அ(1)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டும், அத்தகைய அனுமதிக்காலப்பகுதிக்காக ஆணைக்குழுவின் தற்காலிக உறுப்பினராகவிருப்பதற்கு ஆளொருவரை நியமித்தலும் வேண்டும்.

(2) சனாதிபதியிடமிருந்து அனுமதியைப் பெறாமல் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தேதியிலிருந்து பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக் குழுவின் உறுப்பினராக அதன்பின்னர் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது.

அலுவலர்களையும் பணியாட்டொகுதியினரையும் ஆணைக்குழு நியமித்தல், பதவியுயர்த்தல் முதலியன.

**28.** (1) ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவிநீக்குதல் என்பன ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது ஆணைக் குழுவுக்கும் தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்குமான ஒரு தகைமையுடைய செயலாளரையும் அத்தகைய வேறு அலுவலர்களையும் கணக்காய்வுசாராப் பணியாட்டொகுதியினரையும் நியமிக்கலாம்.

(3) இணைந்த சேவைகளிலிருந்து தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கு இணைக்கப்பட்டோராகவுள்ளோர் தவிர, ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்பட்ட ஆட்களின் சம்பளங்களும் மற்றும் ஏனைய படிகளும் மற்றும் வேறு அனுகூலங்களும், சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழுவின் கருத்துக்களைப் பெற்றபின்னர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், திரட்டு நிதியத்துக்குப் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் VI

### தேசியக் கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபித்தல்

*தேசிய கணக்காய்வு அலுவலகத்தை தாபித்தல்.*

**29.** கணக்காய்வாளர் தலைமையதிபதி அவரது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் அவருக்கு உதவிபுரிவதற்கு என (இதனகத்துப்பின்னர் "கணக்காய்வு அலுவலகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய கணக்காய்வு அலுவலகமொன்றிருத்தல் வேண்டும்; அது கணக்காய்வாளர் தலைமையதிபதியையும் இச்சட்டத்தின் 30ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஒரு பணியாட்டொகுதியினரையும் கணக்காய்வு சாராப் பணியாட்டொகுதியினரையும் (இதனகத்துப்பின்னர் "கணக்காய்வு அலுவலகத்தின் பணியாட்டொகுதியினர்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கொண்டிருத்தல் வேண்டும்.

*இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைத் தாபித்தல்.*

**30.** (1) இலங்கை அரச கணக்காய்வுச் சேவையென அறியப்பட வேண்டிய சேவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்குமுன்னரான தேதியன்று சேவையாற்றுகின்ற இலங்கைக் கணக்காய்வுச் சேவையினதும் கணக்காய்வுப் பரிசோதகர்கள் சேவையினதும் உறுப்பினர்கள் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்றுள்ளவாறு இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கணக்காய்வு அலுவலகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவர் பதவிவிலகுதல்.*

**31.** ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்பட்ட கணக்காய்வு அலுவலகப் பணியாட்டொகுதி உறுப்பினரெவரும், ஆணைக் குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

*நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபைக்கான மேன்முறையீடுகள்.*

**32.** இருபத்தெட்டாம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதன் முடிபினால் இன்னலுறும்ஓர் ஆள், அத்தகைய முடிபுக்கெதிராக 153எ என்னும் உறுப்புரையின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

*அலுவலர்களைக் கடமைத் தலமிடுகை.*

**33.** (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் அலுவலர்களுள் எவரையும் அல்லது அவரினால் சட்டமுறையாக ஈடுபடுத்தப்பட்ட வேறெவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரை அல்லது வேறெவரேனும் ஆளை இலங்கையின் எப்பாகத்திலும் ஒரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் ஏதேனும் கணக்காய்வை நிறைவேற்றுவதற்கு அனுப்பி வைக்கலாம்.

(2) கணக்காய்வுக்குட்படு எல்லா உருவகங்களும் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடனும் அவரினால் அனுப்பிவைக்கப்பட்ட எவரேனும் அலுவலருடனும் ஒத்துழைத்தல் வேண்டுமென்பதுடன், பயனுள்ள கணக்காய்வொன்றை நிறைவேற்றுவதனை வசதிப்படுத்துவதற்குக் காப்பான மற்றும் பாதுகாப்பான வேலைச் சூழலை வழங்குதலும் வேண்டும்.

*தேசிய வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்காக ஆணைக்குழு வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்.*

**34.** ஆணைக்குழுவானது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டவாறான காலப் பகுதியினுள் கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும். சொல்லப்பட்ட மதிப்பீடுகள் அமைச்சருடனும் ஆணைக்குழுவின் தவிசாளருடனும் கலந்தாலோசித்த பின்னர் சபாநாயகரால் முடிபு செய்யக்கூடியவாறான அத்தகைய தேதியன்று சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சபாநாயகர் சொல்லப்பட்ட மதிப்பீடுகளை நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அவதானிப்புகளுடன் அதன் பரிசீலனைக்காகப் பாராளுமன்றத்தின் முன் இடுதல் வேண்டும்; அவர் தமது அவதானிப்புகளை, அத்தகைய வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டதிலிருந்து பத்துவேலைநாட்களினுள் சபாநாயகருக்கு வழங்குதல் வேண்டும். பாராளுமன்றம் கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைப் பரிசீலனை செய்தபின்னர் பாராளுமன்றம் தகுதியானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றுடன், தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக அதனை நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்.

**35.** (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு நிதி யாண்டும் தொடங்குவதிலிருந்து ஆகக்குறைந்தது அறுபது நாட் களுக்கு முன்னரேனும், எதிர்வரும் ஆண்டுக்காகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உத்தேசிக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித் திட்டத்தை விவரிக்கின்ற வரைவு வருடாந்த வேலை நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தாபித்து சபாநாயகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

*கணக்காய்வாளர் தலைமையதிபதி வருடாந்த வேலை நிகழ்ச்சித் திட்டத்தைச் சமர்ப்பித்தல்.*

(2) சபாநாயகர், வரைவு வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டத்தை, நிகழ்ச்சித்திட்ட முன்னுரிமைகள் உட்பட எவையேனும் கருத் துரைகள் அல்லது திருத்தங்களைக் கோரி நிலையியற் கட்டளைகளின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவொன்றினால் பரீசீலனை செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும். சபாநாயகர் அல்லது சொல்லப்பட்ட குழு, வேலை நிகழ்ச்சித்திட்டம் பெறப்பட்ட தேதி யிலிருந்து முப்பது நாட்களினுள் சொல்லப்பட்ட கருத்துரைகளை அல்லது திருத்தங்களை அனுப்புவதற்குத் தேவைப்படுத்தப்படலாம். சபாநாயகர் அவற்றைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பரிசீலனைகள் எவையும் செய்யப் படாதவிடத்து, சபாநாயகர், கணக்காய்வாளர் தலைமையதி பதியினால் சமர்ப்பிக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தை நேரடியாகப் பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழான பரிசீலனைகள் செய்யப்படு மிடத்து, கணக்காய்வாளர் தலைமையதிபதி, எவையேனும் கருத்துரைகளை அல்லது திருத்தங்களைக் கவனத்துட்கொண்ட பின்னர், சபாநாயகரினால் அல்லது சொல்லப்பட்ட குழுவினால் ஆலோசனையளிக்கப்பட்டவாறு வேலை நிகழ்ச்சித்திட்டத்தைத் திருத்தலாம்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதி, பூர்த்திசெய்யப்பட்ட வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒவ்வொரு நிதியாண்டும் தொடங்குமுன்னர் சபாநாயகருக்கு முன்வைத்தல் வேண்டுமென்பதுடன், சபாநாயகர், அப்போது, வேலை நிகழ்ச்சித் திட்டத்தைப் பராளுமன்றத்தில் இடுதலும் வேண்டும்.

கணக்காய்வு அலுவலகத்தைக் கணக்காய்வு செய்வதற்குச் சுயாதீனமான தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கான தத்துவம்.

**36.** (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாகவுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கணக்காய்வு அலுவலகத்தின் நிதியாண்டு தொடர்பான நிதிக்கூற்றுக்கள், கணக்குகள் மற்றும் வேறு தகவல்களின் கணக்காய்வை நிறைவேற்றுவதற்குச் சபாநாயகர் சுயாதீனமான தகைமைபெற்ற கணக்காய்வாளரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், இந்நோக்கத்துக்காகக் கணக்காய்வு அலுவலகம் இச்சட்டத்தின்கீழ் கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும். கணக்காய்வுக்குட்படு உருவகமொன்று மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதி பற்றிய ஏதேனும் குறிப்பீடு ஏற்றமாற்றங்களுடன் கணக்காய்வு அலுவலகமும் சுயாதீனமான தகைமைபெற்ற கணக்காய்வாளரும் தொடர்பாக ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சுயாதீனமான தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரை நியமித்தல், அத்தகைய கணக்காய்வாளரொருவருக்குச் செலுத்தப்படவேண்டிய ஊதியமுட்பட, ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்; அவ்வூதியம் கணக்காய்வு அலுவலகத்தினது செலவுகளின் பாகமாகக் கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டும்.

(3) கணக்காய்வைப் பூர்த்திசெய்வதன்மேல், அத்தகைய சுயாதீனமான தகைமைபெற்ற கணக்காய்வாளர் அதன்மீதான அவரது அறிக்கையை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவானது,சுயாதீனமான தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் அத்தகைய கணக்காய்வு நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் அதன்மீது கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்திருக்கக்கூடிய எவையேனும் அவதானிப்புகளுடன் அல்லது கருத்துக்களுடன் சேர்த்து பாராளுமன்றத்தில் அத்தகைய அறிக்கை முன்வைக்கப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

(4) சுயாதீனமான தகைமைபெற்ற கணக்காய்வாளரின் அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் 5ஆம் பிரிவுக்கிணங்கவும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்துக்கு இணங்கியொழுகவும் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக் கள்; அத்துடன்

(ஆ) 35ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தியமை பற்றியவொரு விபரம்.

**37.** (1) கணக்காய்வு நிதியம் என அறியப்படவேண்டிய (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரு நிதியம் தாபிக்கப்படுதல் வேண்டும். கணக்காய்வு நிதியம்.

(2) அந்நிதியத்தினுள் -

(அ) கணக்காய்வுக் கட்டணமாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியால் சேகரிக்கப்படும் பணங்களில் பதினைந்து சதவீதம்;

(ஆ) பாராளுமன்றத்தின் ஒருப்பாட்டுடன் அரசாங்கத்தால் வரவுவைக்கப்படும் எல்லாக் கொடுப்பனவுகளும்;

(இ) 50ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்படும் ஏதேனும் ஆகுசெலவு,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அந்நிதியத்திலிருந்து —

(அ) 50ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட ஏதேனும் செலவு;

(ஆ) நிதியத்தை நிருவகிப்பதில் உறப்படும் எல்லாச் செலவு களும்;

(இ) இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிவதில் விதிவிலக்கான ஆற்றலை வெளிப்படுத்திய ஆட்களுக்கு வெகுமதிகள் அல்லது ஊக்குவிப்புகள் சார்பாக

ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க கொடுக்கப்பட்ட எல்லா கொடுப்பனவுகளும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) நிதியாண்டினுள் பயன்படுத்தப்படாத ஏதேனும் பணத் தொகை திரட்டிய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(5) நிதியத்தின் கணக்குகள் 36ஆம் பிரிவின்கீழ் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

### ஒரு பிரதான கணக்கீட்டு அலுவலரினதும் கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்புக்கள்

*ஒரு பிரதான கணக்கீட்டு அலுவலரினதும் கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்புக்கள்.*

**38.** (1) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் வேறுவகையாகக் குறித்துரைக்கப் பட்டாலொழிய, கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றின் ஒரு பிரதான கணக்கீட்டு அலுவலர் அல்லது கணக்கீட்டு அலுவலர், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக —

(அ) கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் கணக்காய்வை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் ஒருங்கிணைவதற்கு அத்தகைய உருவகத்தினுள் பொறுப்பாகவுள்ள அலுவலராக விருத்தல் வேண்டும்;

(ஆ) நிதிதிட்டமிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள், முறையான புத்தகங்களையும் கணக்குகளையும் பேணுதல், நிதிமுகாமை மற்றும் முகாமைத்தகவலை வழங்குவதற் கான ஓர் அமைப்புமுறை என்பன பயனுள்ள வகையில் அமைந்துள்ளனவென்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) நிதிக்கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளகக் கட்டுப் பாட்டு முறைமை அத்தகைய ஒவ்வோர் உருவகத் திலும் உள்ளதென்பதையும் அத்தகைய முறைமைகளின்

பயனுறுதன்மையைக் கண்காணிப்பதற்குக் காலாகாலப் பரிசீலனைகளை நிறைவேற்றுதலையும் அதற்கிணங்க அத்தகைய முறைமைகள் பயனுள்ளவகையில் நிறை வேற்றப்படுவதற்குத் தேவைப்பட்டவாறான எவை யேனும் மாற்றங்களைச் செய்தலையும் உறுதிப்படுத்தல் வேண்டும்;

(ஈ) கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பாக வருடாந்த மற்றும் வேறு நிதிக்கூற்றுக்கள் உரியநேரத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதலை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன் மேலதிகமாக பிரதான கணக் கீட்டு அலுவலர் பாராளுமன்றத்துக்கு உருவகம் பற்றிய வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தலும் வேண்டும்;

(உ) எல்லாக் கணக்காய்வுக் கேள்விகளுக்கும் கணக்காய் வாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்ட வாறு குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் விடையளிக்கப் படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஊ) உள்ளகக் கணக்காய்வொன்றை நடாத்துவதற்குப் பயனுள்ள அமைப்புமுறை உள்ளதனை உறுதிப்படுத் துதல் வேண்டும்;

(எ) கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அதிகார மளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அவசியமாகவுள்ள போதிய அலுவலக இடவசதியும், வசதிகளும் அவர்களின் கடமைகளைத் தகுந்தமுறையில் நிறை வேற்றுவதற்கு வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஏ) ஏதேனும் அப்பட்டமான மோசடி அல்லது ஏதேனும் குற்றவியற் செயற்பாடு பற்றிய அறிவித்தல் கணக்காய் வாளர் தலைமையதிபதியினால் பெறப்பட்டதன்மேல், அவர், தாமதமின்றி, சட்டவலுவாக்கல் முகவர் நிலையமொன்றுக்கு முறைப்பாடொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரதான கணக்கீட்டு அலுவலரினால் நிறைவேற்றப் பட வேண்டிய பரிசீலனை எழுத்திலிருத்தல் வேண்டுமென்பது டன், அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதலும் வேண்டும்.

*கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரமான முகாமைக் கணக்காய்வு அறிக்கையைப் பிரதான கணக்கீட்டு அலுவலர் முதலியோர் கவனத்துட் கொள்ளுதல்.*

**39.** (1) ஓர் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர், ஒரு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் அல்லது சம்பந்தப்பட்ட வேறேதேனும் கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் ஆளும் சபை அல்லது தலைவர், 11ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் வருடாந்த விபரமான முகாமைக் கணக்காய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றதன்மேல், அத்தகைய அறிக்கையைக் கவனத்துட்கொண்டு, அதன் மீதான கரிசனையும் உத்தேசிக்கப்பட்ட பரிகரிப்பு நடவடிக்கைகள் பற்றி யும் கணக்காய்வாளர் தலைமையதிபதி, திறைசேரிச் செயலாளர் மற்றும் தோதான அமைச்சர் என்போருக்கு அறிவித்தல் வேண் டும்.

(2) அத்தகைய விபரமான முகாமைக் கணக்காய்வு அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுள் எவை பற்றியும் நடவடிக்கை யெடுப்பதற்கான இயலுமை அல்லது இயலாமை ஏதேனுமிருப் பின் அதுபற்றிய காரணங்களைக் கொடுத்து, கணக்காய்வு செய்யப்பட்ட உருவகங்களுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட திலிருந்து மூன்று மாதங்களினுள் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பரிகரிப்பு நடவடிக்கைகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*உள்ளகக் கணக்காய்வு.*

**40.** (1) ஓர் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர், அத்த கைய அமைச்சுக்கு உள்ளகக் கணக்காய்வாளரொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அமைச்சின்கீழ் வருகின்ற ஒவ்வொரு திணைக்களத்தினதும் கணக்கீட்டு அலுவலர் அத்தகைய ஒவ்வொரு திணைக்களத்தை உள்ளகக் கணக்காய்வு செய்வதற்கு தகுதிவாய்ந்த உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தலும் வேண்டும்; அத்துடன் வேறு ஒவ்வொரு கணக்காய் வுக்குட்படு உருவகமும், அத்தகைய கணக்காய்வுக்குட்படு

உருவகத்தின் ஆளும் குழுவினால் முறையாக நியமிக்கப்பட்ட அதன் சொந்த உள்ளகக் கணக்காய்வாளரை உள்ளகக் கணக்காய் வொன்றைப் புரிதற்கென கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) உள்ளகக் கணக்காய்வாளரொருவர் (1)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படாதவிடத்து, அத்தகைய நியமனம் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஈராண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஒரு கணக்காய்வாளரின் பணிகளும், அவற்றின் நோக்கெல் லையையும் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதி பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய் வாளரொருவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு, தலைவருக்கு அல்லது ஆளும் குழுவுக்கு நேரடியாக அறிக்கை யிடுதல் வேண்டும்.

(5) நான்காம் பிரிவின்கீழ் உள்ளகக் கணக்காய்வாளர்களி னால் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா அறிக்கைகளினதும் பிரதிகள், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் நிதி அமைச்சின் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்துக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

*கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக்கள்.*

**41.** (1) இரண்டாம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தினதும் ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்திற்குமென தொழிற்பாடுகளின் தொடர்ச்சியான பரிசீலனையைப் பொறுப்பேற்பதன்மூலம் விடயத்துக்கேற்ப, அவ்வப் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது அவ்வவ் ஆளும் குழுவிற்கு உதவுவதற்கு அவரினால் நியமிக்கப்பட்டதும், கணக்காய்வுக் குழு என்னும் பெயரினால் அல்லது வேறேதேனும் பெயரினால் குறிப்பீடு செய்யப்பட்டதுமான கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவொன்றிருத்தல் வேண்டும்; அத்துடன் அக்குழு, சொல்லப்பட்ட பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது

கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது அவ்வவ் ஆளும் குழுவுக்கு காலத்துக்குக்காலம் அறிக்கையிடுதலும் வேண்டும். சொல்லப் பட்ட குழு, குறிப்பாக —

(அ) அதன் வளங்கள், அத்தகைய உருவகத்தின் முன் தீர் மானிக்கப்பட்ட குறிக்கோள்களை முழுமையாக எய்தும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய உருவகத்தினால் இலங்கையில் கிடைக்கக்கூடிய வளங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் குறிப்பான கருத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் சிக்கனமான முறையிலும் வினைத்திறனாகவும் பயன் படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குக் கணக் காய்வு செய்யப்பட்ட உருவகத்தின் எல்லாக் கணக்காய்வு மற்றும் முகாமை அம்சங்களைப் பரிசீலனை செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய குறிக்கோள்கள் அத்தகைய செயற்பாட்டுக்கு நிதிகளின் செலுத்தீட்டுக்காக அதிகாரமளிக்கப்பட்ட காலவரையறைகளினுள் உண்மையில் எய்தப்பட்டுள்ள னவாவென்பதையும், ஏதேனும் பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம், திட்டங்களில் எதிர்நோக்கப்பட்டவாறு உண்மையில் தொழிற்பாட்டி லுள்ளதாவென்பதையும் நிச்சயித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கணக்காய்வுக்குட்படு உருவகமொன் றானது—

(அ) ஓர் அமைச்சு;

(ஆ) ஒரு மாகாணசபை;

(இ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம்;

(ஈ) அரசியலமைப்பின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஓர் ஆணைக்குழு அல்லது ஒரு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு;

(உ) சனாதிபதிச் செயலகம்;

(ஊ) பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம்;

(எ) 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அல்லது பதிவுசெய்யப்படதாகக் கருதப்பட்டதும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேலான பங்குகளை அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது ஒரு உள்ளூர் அதிகாரசபை வைத்திருக்கின்றதும் ஆன ஒரு கம்பெனி;

(ஏ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சி; அத்துடன்

(ஐ) சட்டத்தால் அல்லது வேறுவகையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப் படாத குழு,

ஆதல் வேண்டும்.

## பாகம் VIII

### தவறுகளும் தண்டங்களும்

*கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு உதவத் தவறுதல் தவறொன்றாதல்.*

**42.** (1) இச்சட்டத்தின்கீழான கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் ஏதேனும் தேவைப்பாட்டை கணக்காய்வுக்குட்படு உருவகமொன்று பூர்த்தி செய்தல் வேண்டுமென்பதுடன்,-

(அ) ஏதேனும் தகவலை, ஆவணத்தை, விளக்கத்தை, அறிக்கையை அல்லது விடயப்பொருளைக் கொடுத்துதவும்படி கோரப்படும் போது அத்தகைய கோரிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு வேலை நாட்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றினுள் அவ்வாறு செய்யத் தவறுகின்றவரான அல்லது மறுக்கின்றவரான;

(ஆ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் முன்னர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் முன்னர் தோன்றுவதற்கு, விடயம் பற்றிப் பரிச்சயமுள்ள ஆளொருவரைப் பெயர்குறித்து நியமிக்கும்படிகோரப்படும்போது அவ்வாறு செய்வதற்கு மறுக்கின்றவரான அல்லது தவறுகின்றவரான;

(இ) ஏதேனும் கூற்று அல்லது ஏதேனும் ஆவணம் பொய்யானதென அல்லது பிறழ்வழியுய்ப்பதென அறிந்துகொண்டு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அக்கூற்றை அளிக்கின்றவரான அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்கின்றவரான;

(ஈ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் பணிகளையும் கடமைகளையும் எதிர்க்கின்றவரான அல்லது அவற்றுக்கு முட்டுக்கட்டையிடுகின்றவரான,

எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பகர்வின் மீதான சுருக்க விளக்கத்தின் பின்னர் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) தவறுக்காக (1)ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டத்துக்கு மேலதிகமாகவும் அதனையடுத்தும், ஏதேனும் பகிரங்கப் பதவியை வகிக்கின்ற அல்லது பகிரங்க அலுவலரொருவராகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொவ்வொருவரும்,-

(அ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட ஒரு நீதிமன்றுக்கு ஒரு மேன்முறையீடு அமைந்திருக்கின்றவிடத்து, குற்றத்தீர்ப்பு மேன்முறையீட்டில் உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து; அத்துடன்

(ஆ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட ஒரு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யப்பட்டிராதவிடத்து, எக்காலத்துள் அத்தகைய மேன்முறையீடு செய்யப்படுதல் கூடுமோ அக்காலப்பகுதி முடிவடைவதன்மீது உடனடியாக,

அத்தகைய பதவியை வகிப்பதற்கு அல்லது அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படுவதற்குத் தகைமை யற்றவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவினது அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவை முதலியவற்றின் எவரேனும் அலுவலரினது முடிபொன்றின் மீது செல்வாக்குச் செலுத்துதல் அல்லது செலுத்த எத்தனித்தல் தவறொன்றாதல்.

**43.** (1) எந்த ஆள் அவரது கடமையின் போதல்லாது வேறு வகையாக, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, தாமே அல்லது வேறொருவர் மூலமாகவோ,-

(அ) ஆணைக்குழுவின்;

(ஆ) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரின்;

(இ) இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின்;

(ஈ) 36ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரின்; அல்லது

(உ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் பணியைப் பொறுப்பேற்பதற்கு ஆணைக்குழுவினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படக்கூடியவாறான எவரேனுமாளின்,

ஏதேனும் முடிபின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றாரோ அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்றாரோ அந்த ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1)ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தைக் கேட்டுத்தீர்மானிப் பதற்கு நியாயாதிக்கங் கொண்டிருத்தல் வேண்டும்.

**44.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றி னால் புரியப்படுமிடத்து, அப்போது- ஆட்கள் குழுக்களினா லான தவறுகள்.

(அ) அத்தகைய ஆட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவாகவிருப்பின் அல்லது ஒரு கூட்டுத்தாபனமாகவிருப்பின் அதன் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது அலுவலரும் அல்லது முகவரும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், ஒவ்வொரு பங்காளரும்,

பிரிவுகள் 42 மற்றும் 43இன்கீழ் அவ்வவ் தவறுகளுக்காகக் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான குற்றப்பணத்துக்கு அல்லது மறியற்றண்டனைக்கு அல்லது அவையிரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஒரு பணிப்பாளர் அல்லது ஓர் அலுவலர் அல்லது முகவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் அத்தவறு தாம் அறியாமல் புரியப்பட்டது என்று அல்லது அத்த கைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அத்தகைய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பயன்படுத்தினாரென்று அவர் எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படு தலாகாது.

**45.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப் பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஓர் ஏனைய தவறுகள்.

இலட்சம்ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*குற்றத் தீர்ப்பளிக்கப் பட்ட ஆட்கள் செயற்போக்கில் வேறு தவறு களுக்காகத் தண்டிக்கப் படுதல்.*

**46.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதன் செயற்போக்கில் புரியப்படும் வேறேதேனும் தவறுக்காகத் தண்டிக்கப்படுவதினின்றும் தடை செய்யப்படுதலாகாது.

## பாகம் IX

### பொதுவானவை

*பகிரங்கக் கணக்காய்வுப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தைத் தாபித்தல்.*

**47.** (1) பகிரங்கக் கணக்காய்வுப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று, பகிரங்க நிதி மற்றும் கணக்காய்வுத் துறையில் மனிதவளங்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் கணக்காய்வு அலுவலகத்தின்கீழ் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, நிலையத்தின் முகாமை தொடர்பான விதிகளை வகுத்தமைத்தல் வேண்டும்.

*விதிகளை ஆக்குவதற்கு ஆணைக்குழு வுக்குள்ள தத்துவம்.*

**48.** (1) ஆணைக்குழுவானது, எந்த எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத விதியெதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப் பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கணக்காய் வாளர் தலைமை யதிபதி பணிப்புக்கள் விடுத்தல்.*

**49**. கணக்காய்வாளர் தலைமையதிபதி, காலத்துக்குக்காலம், கணக்காய்வு அலுவலகத்தின் பணியாட்டொகுதியினருக்கு அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு, கணக்காய்வொன்றை நடாத்தும்போது அவரது தத்துவங் களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் பற்றி எழுத்திலான அத்தகைய பொதுவான மற்றும் விசேடமான பணிப்புக்களை விடுக்கலாமென்பதுடன், அப்பணியாட்டொகுதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் அத்தகைய பணிப்புக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

*சட்டத் துடர்ச்சிகளுக் கெதிரான பாதுகாப்பு.*

**50**. (1) குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பெதுவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தைப் புரிவதில் அல்லது பிரயோகிப்பதில் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட எதற்காகவும், கணக்காய்வாளர் தலைமையதிபதியை, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவ லரை, தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் எவரேனும் அலுவலரை அல்லது 9 (1) (அ) என்னும் பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்டவாறு கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதில் உதவுகின்ற வேறெவரேனும் ஆளைப் பற்று வதாதலாகாது.

(2) விடயத்துக்கேற்ப, கணக்காய்வாளர் தலைமையதிபதி, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் அலுவலரொருவர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது 8(அ) என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறு கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளை நிறைவேற்று வதில் உதவுகின்ற வேறெவரேனும் ஆள் என்போரினால்

இச்சட்டத்தின்கீழ் அவரினால் புரியப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, திரட்டிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் கணக்காய்வு அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாட் டொகுதியினர் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல்.*

**51.** ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் மற்றும் கணக்காய்வு அலுவலகத்தின் அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட, கணக்காய்வு அலுவலகம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.*

**52.** இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட, கணக்காய்வு அலுவலகம் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*1958ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.*

**53.** ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டின் 26ஆம் இலக்க, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கட்டணங்கள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

*நிலைபெயர்கால ஏற்பாடுகள்.*

**54.** (1) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் தொழிற்படாதொழிதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், -

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் வரவுக்குள்ள எல்லாப் பணங்களும், அத்தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு அலுவலகத்துக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக் களத்துக்குச் சொந்தமானவையும் அத்திணைக் களத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டவை யுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்க ளின் மீதான எல்லா ஆதன மற்றும் வேறு உரிமைகளும் அத்தேதியிலிருந்து கணக்காய்வு அலுவலகத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்;

(இ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் எல்லாத் தனிசுகளும் கடப்பாடு களும் பொறுப்புக்களும் அத்தேதியிலிருந்து பயனு றுவதாக கணக்காய்வு அலுவலகத்தின் தனிசுகளாகவும் கடப்பாடுகளாகவும் பொறுப்புக்களாகவும் கருதப்படு தல் வேண்டும்;

(ஈ) கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் நோக்கங்களுக்காகச் செய்யப்பட்டவையும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன் படிக்கைகளும் அத்தேதியிலிருந்து பயனுறுவதாக கணக்காய்வு அலுவலகத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப் படுதல் வேண்டும்;

(உ) கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும் வழக்குநடவடிக்கைகளும் இச் சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து கணக்காய்வு அலுவலகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்குநடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(ஊ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கொடுத்துத்தீர்க்கப்படாதவையும் கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் சார்பில் அல்லது அதற்கெதிராக ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் பதியப்பட்டவையும் அல்லது ஆக்கப்பட்டவையுமான எல்லாத் தீர்வைகளும் மற்றும் கட்டளைகளும், அத்தேதியிலிருந்து கணக்காய்வு அலுவலகத்தின் சார்பில் அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்டுள்ளனவாக அல்லது ஆக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம்;

(எ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதவையுமான ஒவ்வொரு விதியும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஏ) முடிவுறாதுள்ள எல்லாக் கணக்காய்வுகளும் இச்சட்டத்தின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் தொடர்ந்து நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) கணக்காய்வுக்குட்படு உருவகத்துக்கு உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படாதவிடத்து, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர் முன்னர் நிறைவேற்றப்படுகின்றவாறான உள்ளகக் கணக்காய்வாளரின் பணி, அத்தகைய நியமனம்வரை தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(4) தேசிய கணக்காய்வு அலுவலகம் தாபிக்கப்படுவதற்கு நேர்முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக் களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள இலங்கை அரச கணக்காய்வுச் சேவையினதும் கணக்காய்வுப் பரிசோதனையாளர் சேவையினதும் உறுப்பினர்கள், தேசியக் கணக்காய்வு அலுவலகத் தின் ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தேதிக்கு நேர்முன்னர் அவ்வூழியருக்கு ஏற்புடையற்பால தாகவிருக்கக்கூடிய அதே நியதிநிபந்தனைகளின்கீழ் தொழிலுக் கமர்த்தப்படுதலும் வேண்டும்.

(5) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் எல்லா அலுவலர்களுக்கும் பணியாட்டொகுதியினருக்கும் தொழில்முனைதல் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவானது, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதி யன்று கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக் களத்தில் சேவையிலுள்ள இலங்கைக் கணக்காய்வுச் சேவையினதும் கணக்காய்வுப் பரிசோதகர்கள் சேவை யினதும் எல்லா உறுப்பினர்களுக்கும் முனைவானது எத்தேதியன்று செய்யப்படுகின்றதோ அத்தேதியன்று அவர்களுக்கு ஏற்புடையற்பாலனவாகவிருந்த அத்தகைய தொழில் நியதிகளிலும் நிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறைந்தனவாகவிராத அத்தகைய நியதிகளின் மீதும் நிபந்தனைகளின் மீதும் அவர்களுக் குக் கணக்காய்வு அலுவலகத்தில் தொழில் முனைதல் வேண்டும்;

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் செய்யப் பட்ட முனைவானது, அம்முனைவு எத்தேதியன்று செய்யப்பட்டதோ அத் தேதியிலிருந்து இரண்டு மாத காலப்பகுதி முடிவுறும்வரை கிடைக்கக்கூடியதாதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வு அலுவலகத்தைச்

சேரவிரும்புகின்ற இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தில் சேவையிலுள்ள இலங்கைக் கணக்காய்வுச் சேவையினதும் கணக்காய்வுப் பரிசோதகர்கள் சேவையினதும் எவரேனும் உறுப்பினர் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் உறுப்பின ரொருவராக வருதலும் வேண்டும்;

(இ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று சேவையிலுள்ள இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் அத்துடன் கணக்காய்வுப் பரிசோதகர்கள் சேவையின் ஓர் உறுப்பினர் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தினால் ஆட்சேர்க்கப் பட்டு இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற் போந்த தேதியன்று கணக்காய்வாளர் தலைமை யதிபதித் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட் டுள்ள கணக்காய்வுசாராப் பணியாட்டொகுதி உறுப்பி னர், கணக்காய்வு அலுவலகத்தின் ஊழியரொருவராக வருமிடத்து, கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் ஊழியரொருவராகப் பகிரங்க சேவையில் அவரது தொழிற் காலப்பகுதி, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் உறுப்பினராகத் தொழிற் காலப்பகுதியொன்றாகக் கணக்கிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அவரது தொழில் அந்தஸ்தி லான மாற்றம் பகிரங்கசேவையில் அவரது தொழிற் காலப்பகுதியின் தொடர்ச்சியை முறித்தலுமாகாது;

(ஈ) கணக்காய்வு அலுவலகத்தில் சேவையாற்றுவதற்கு விருப்புத் தெரிவிக்காதவரும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று கணக்காய் வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தில் சேவையி லுள்ளவருமான இலங்கைக் கணக்காய்வுச் சேவையின், அத்துடன் கணக்காய்வுப் பரிசோதகர்கள் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் எவரேனும் கணக்காய்வு சாராப் பணியாட்டொகுதி உறுப்பினர்

ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளினது ஏற்பாடுகளின் கீழ் ஓய்வுபெறலாம்; ஆணைக்குழுவானது, நியமனம், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றம் தொடர்பான அதன் நடவடிக்கைமுறைசார் விதிகளை வகுத்த மைக்கும்வரை பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் வகுத்தமைக்கப்பட்டு 2009, பெப்ருவரி 20 ஆந்தேதிய 1589/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடவடிக்கைமுறைசார் விதிகள், தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் பணியாட் டொகுதி உறுப்பினர்களுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்;

(உ) தேசியக் கணக்காய்வு அலுவலகத்தில் தொழிலுக் கமர்த்தப்பட்ட இணைந்த சேவைகளின் அல்லது வேறேதேனும் சேவையின் உறுப்பினரொருவர், அந்தந்த இணைந்த சேவைகளின் சேவைக் குறிப்புகளின் நியதி நிபந்தனைகளுக்கமைய தேசியக் கணக்காய்வு அலுவலகத்தில் தொடர்ந்திருத்தல் வேண்டும்;

(ஊ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட இணைந்த சேவையொன்றின் உறுப்பினரொருவர் அந்தந்த இணைந்த சேவையின் குறிப்புகளின் நியதி நிபந்தனை களுக்கமைய, கணக்காய்வு அலுவலகத்தில் சேவை யாற்றுவதற்கு அல்லது கணக்காய்வு அலுவலகத் திலிருந்து இடமாற்றப்படுவதற்கு விருப்பத்தெரிவு கொண்டவர்களாகவிருத்தல் வேண்டும்;

(எ) கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நேரடியாக ஆட்சேர்க்கப்பட்டு இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக் களத்தில் சேவையாற்றுகின்றவர்களும் திணைக்களச் சேவையினுள் கணக்காய்வு அலுவலகத்தில் கணக் காய்வுசாரா அலுவலர்களாக இருப்பதற்கு விருப்புத் தெரிவிக்கின்றவர்களுமான அலுவலர்கள், இலங்கை அரச கணக்காய்வுச் சேவையிலிருந்து தெளிவான முறையில் தனிவேறானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**55.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலொழிய – பொருள் கோடல்.

"கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப் பட்ட எவரேனுமாள்" என்பது, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குக் குறித்தளிக் கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்குப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து அவரினால் எழுத்தில் நியமிக் கப்பட்ட எவரேனுமாள் அல்லது எவரது சேவைகள் ஈடுபடுத்தப்படுகின்றனவோ அவர் என்று பொரு ளாகும்; அவர்கள், தேசிய கணக்காய்வு அலுவலகத் தின் அரச கணக்காய்வுச் சேவையின் உறுப்பினர்களாக, தகைமைபெற்ற கணக்காய்வாளராக அல்லது தேவைப் பட்ட துறையில் நிபுணத்துவம் கொண்ட வேறு எவரே னும் ஆளாக இருப்பதுடன் அவர் பதவிவகிக்கா தொழியும்வரை அத்தகைய பணிகளை நிறைவேற்று தலும் வேண்டும்;

"கணக்காய்வுக்குட்படு உருவகம்" என்பது, பின்வருவன வற்றையும் பின்வருவோரையும் உள்ளடக்கும்:-

(அ) அமைச்சரவை அலுவலகங்கள்;

(ஆ) எல்லா அரசாங்கத் திணைக்களங்களும்;

(இ) சனாதிபதிச் செயலகம்;

(ஈ) பிரதமரினது செயலாளரின் அலுவலகம்;

(உ) நீதிச் சேவை ஆணைக்குழு;

(ஊ) அரசியலமைப்புப் பேரவை;

(எ) அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ என்ப தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக் களும் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க,

விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக் குழுவும்;

(ஏ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணை யாளர்;

(ஐ) பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம்;

(ஒ) மாகாணசபைகளும் உள்ளூரதிகாரசபை களும்;

(ஓ) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட முறையான நிதியங்களும் அல்லது சபைகளும்;

(ஔ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்குரித் தாக்கப்பட்ட தொழில்களும் வேறு பொறுப்பு முயற்சிகளும்;

(க) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனி கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட தும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை அரசாங்கம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை ஒன்று வைத்திருக்கின் றதுமான ஏதேனும் கம்பெனி;

“கணக்காய்வு நியமங்கள்குழு” என்பது, 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு ஏற்பாடுகளின் நியமங்கள்குழு என்று பொருளாகும்;

"கணக்கீட்டு அலுவலர்" என்பது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக வேறு ஒழுங்கேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளவிடத்துத் தவிர, நிதி ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட முறையில் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு உடனடிப் பொறுப்பைக் கொண்டிருக்கவேண்டிய ஒவ்வொரு திணைக்களத்தினதும் தலைவர் என்று பொருளாகும்;

"கணக்காய்வாளர் தலைமையதிபதி" என்பது, அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"ஒருங்கியலும் கணக்காய்வு" என்பது, நிதிக் கொடுக்கல் வாங்கல் நிகழும் வேளையில் கொடுக்கல்வாங்கல்களைப் பரிசோதித்தலை அல்லது ஏதேனும் சமாந்தரக் கொடுக்கல்வாங்கலைப் பரிசோதித்தலை உள்ளடக்கும்;

"பிரதான கணக்கீட்டு அலுவலர்" என்பது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறுவகையாகக் குறிப்பாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய –

(அ) ஓர் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலராகவிருப்பதற்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால், அத்தகைய அமைச்சின் செயலாளாராகவிருப்பதற்கு நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சுக்கான செயலாளரை;

(ஆ) அரசியலமைப்பின் உறுப்புரை 52(4) இல் குறித்துரைக்கப்பட்டவொரு திணைக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரை; அல்லது

(இ) பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்டவாறு ஓர் அமைச்சின் செயலாளரினால் மேற்பார்வை செய்யப்படாத வேறு ஏதேனும் திணைக்

களத்துக்கு அல்லது உருவகத்துக்குப் பொறுப் பாகவுள்ள அலுவலரை,

உள்ளடக்கும்;

“அரசியலமைப்பு” என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு என்று பொருளாகும்;

“நிதிநிறுவனம்” என்பது, பின்வருவனவற்றையும் பின்வருவோரையும் உள்ளடக்கும்:-

(அ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;

(ஆ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;

(இ) (420ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனம்;

(ஈ) 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட நிதிக்கம்பெனி;

(உ) 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைக் கம்பெனிகள் சட்டத்தின் கருத்துக் குட்பட ஏதேனும் நிதிக் குத்தகை கம்பெனி;

(ஊ) (422ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 2013, பெப்ருவரி 8 ஆந்தேதிய 1796/21ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பணத்தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளின் கருத்துக்குட்பட எவரேனும் பணத்தரகர்;

(எ) (420ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தினதும் (417ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தினதும் கருத்துக்குட்பட எவரேனும் முதனிலை வியாபாரி;

(ஏ) 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்துக் குட்பட ஏதேனும் காப்புறுதிக் கம்பெனி;

(ஐ) 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்துக் குட்பட ஏவரேனும் காப்புறுதித்தரகர் மற்றும் இழப்பு இணக்குபவர்;

(ஒ) 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்துக் குட்பட ஏவரேனும் காப்புறுதித்தரகர் இணக்கு பவர்;

(ஓ) 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை;

(ஔ) 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட எவரேனும் பங்குத் தரகர் அல்லது பங்கு வியாபாரி;

(க) 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்றைத் தொழிற்படுத்துவதற்கு ஏதேனும் முகாமைக் கம்பெனி;

(ங) 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட சந்தை இடைத்தர கராகத் தொழில்கொண்டு நடாத்துகின்ற எவரேனுமாள்;

"ஆளும் குழு" என்பது, ஏதேனும் நியதிச்சட்டமுறையான குழு அல்லது உருவகத்தின் அல்லது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டதும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை அரசாங்கம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்று வைத்திருக்கின்றதுமான ஏதேனும் கம்பெனியின் அலுவல்களினது நிருவாகம் அத்துடன் முகாமை பொறுப்பிக்கப்பட்டுள்ள குழு என்று பொருளாகும்;

"தலைவர்" என்பது, ஓர் அமைச்சின்கீழ் வரும் ஒரு திணைக் களத்தின் தலைவர் என்று பொருளாகும்;

''தகவல்" என்பது, இலத்திரனியல் வழிமுறையால் தோற்றுவிக்கப்பட்ட தரவுகள் உட்பட ஏதேனும் வாய் மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான சான்றை உள்ளடக்குதல் வேண்டும்;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஒரு மாநகரசபை, நகரசபை அல்லது ஒரு பிரதேச சபை என்று பொருளாவதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங் களுக்கு, கடமைகளுக்கு அத்துடன் பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றை ஒத்த தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்ப தற்கும், புரிவதற்கும் அத்துடன் நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக் கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்குகின்றது;

“கணக்காய்வுசாராப் பணியாட்டொகுதியினர்” என்பது, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தில் சேவையிலுள்ள இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் அத்துடன் கணக்காய்வுப் பரிசோதனையாளர்கள் சேவையின் உறுப்பினர்கள் தவிர்ந்த ஆட்களும் மற்றும் இச்சட்டம் நடைமுறைக்குவந்தபின்னர் ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்பட்ட ஆட்களும் என்று பொருளாகும் என்பதுடன், இணைந்த சேவைகள் பணியாட்டொகுதியைச் சேர்ந்த ஆட்களையும் உள்ளடக்கும்;

“மாகாணசபை” என்பது, அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையின் பயனாக ஒரு மாகாணத்துக்கெனத் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை என்று பொருளாகும்;

“பகிரங்கக் கூட்டுத்தாபனம்” என்பது, மானியக்கொடை அல்லது கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளைக்கொண்டு, 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

“வளங்கள்” என்பது, பகிரங்க நிதி, பொது ஆதனம், மனித, பௌதீக அல்லது இயற்கை வளங்கள் மற்றும் தனிசு என்பவற்றை உள்ளடக்கும்;

“இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்” என்பது, 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் என்று பொருளாகும்;

“இலங்கைப் பகிரங்கத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்” என்பது, 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின்கீழும் 12ஆம் பிரிவின் கீழும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்டவையும் 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்துரைக்கப்படக்கூடியவாறானவையுமான இலங்கைப் பகிரங்கத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் என்று பொருளாகும்;

“இலங்கை அரச கணக்காய்வுச் சேவை” என்பது, இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 153(ஆ) (2)ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வுச் சேவை என்று பொருளாகும்; அத்துடன்

“கொடுக்கல்வாங்கல்” என்பது, ஒரு நிதித்தொழிலுடன் அல்லது நிதிசாராத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டை உள்ளடக்கும் என்பதுடன், ஆதனம் தொடர்பாகப் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) ஒரு கொள்வனவு, விற்பனை, கடன், தாக்கீடு, ஈடு, சோந்தை, அடைமானம், கைமாற்றம், ஒப்படைப்பு, சாட்டுதல், மாற்றமர் அடைமானம், செலுத்தீடு, கொடை, நன்கொடை, ஒரு நம்பிக்கைப் பொறுப்பின் உருவாக்கம், கொடுத்துத்தீர்ப்பு, ஏதேனும் பொருளின் வைப்பு உட்பட்ட வைப்பு, மீள்பெறுகை, சொத்துக்களிடையேயான கைமாற்றம் மற்றும் கடன்நீடிப்பு;

(ஆ) ஏதேனும் முகவராண்மை அல்லது அற்றோணித் தத்துவத்தின் அளிப்பு;

(இ) ஆதனத்தின் முழுமையிலான அல்லது அதன் ஏதேனும்பாகத்திலான தற்போதைய அல்லது எதிர்கால, அல்லது உரித்தாக்கப்பட்ட அல்லது எதிர்பாராத ஏதேனும் உரிமை, உரித்து, அக்கறை அல்லது சிறப்புரிமை எவரேனுமாளுக்கு அளிக்கப்படுவதனை விளைவிக்கின்ற எவ்வாறாயினும் விபரிக்கப்பட்ட எத்தகையதுமான வடிவத்திலானதும், அல்லது எத்தகையதுமான விவரணத்திலானதும் அல்லது தன்மையிலானதுமான ஆதனத்தின் வேறேதேனும் கையுதிர்ப்பு அல்லது கையாளுகை.

**56.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**அட்டவணை** (பிரிவு 9(இ))

**இரகசியம் பேணுவதற்கான சத்தியம்**

***2018 ஆம் ஆண்டின் ...............ஆம் இலக்க, தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளின்படி.***

...................................................... ஆகிய நான் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவுள்ளதனால் .................... ................. ......... இன்கீழ்ஊழியரொருவராகவுள்ளதனால்* அல்லது பிரிவு 8(அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதில் உதவுகின்ற நிபுணத்துவ ஆளொருவராகவுள்ளதனால், எனது கடமைகளைப் புரிகையில் எனக்குக் கொடுக்கப்பட்ட, கூறப்பட்ட, என்னால் கலந்துரையாடப்பட்ட அல்லது வேறு வகையில் பெறப்பட்ட எத்தகையதுமான தகவல்களையும் நான் அதியுச்ச இரகசியமான வகையில் பேணுவேன் என்றும், அத்தகைய தகவல்கள் பின்வரும் சூழ்நிலைகளிற்றவிர, பகிரங்கமாக அல்லது தனிப்பட்ட முறையில் எத்தகையதுமான எவ்வடிவத்திலும் வெளிவிடப்படமாட்டாது, கலந்துரையாடப்படமாட்டாது அல்லது கூறப்படமாட்டாது என்றும் பயபக்தியாக வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன் / சத்தியஞ்செய்கின்றேன் :-

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது;

(ஆ) பாராளுமன்றத்தினால் தேவைப்படுத்தப்படும்போது; அல்லது

(இ) 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 9(ஆ) என்னும் பிரிவுக்கு அமைய, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்படும்போது.

இதன்கண் தரப்பட்டுள்ள கடப்பாடுகள்,......................................* இல் ...................................... எனது பதவிக்காலத்தின் போது என்னைப் பிணித்தல் வேண்டுமென்பதுடன், இதன்கீழான எனது கடப்பாடுகளின் மீறுகையாகவிராத காரணத்தினால் பொதுமக்களின் அறிவுக்கு வந்துள்ள எவையேனும் தகவல்கள் தொடர்பாகத்தவிர அதன்பின்னர் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

இரண்டாயிரத்து ..........…......... ஆம் ஆண்டு............................ மாதம் …...…… ஆந்நாளாகிய இன்று இச் சத்தியத்திற்கு எனது கையொப்பத்தை இடுகின்றேன்.

……………………………….

கையொப்பம்

என்முன்னர்............................................ இல் 20............ ஆம் ஆண்டு........................................ மாதம் ........... ஆம் நாளாகிய இன்று சத்தியஞ் செய்யப்பட்டது.

……………………………………………

சபாநாயகர்/கணக்காய்வாளர் தலைமையதிபதி

* தேசியக் கணக்காய்வு அலுவலகம்/கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம்/இணைந்த சேவைகள்

அரசாங்க அச்சுத் திணைக்களம்.